**குருவிட்ட பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

குருவிட்ட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் குருவிட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1) (ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 65,924,859 ஆன 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக காசு அடிப்படையில் மீது கணக்கு வைத்திருந்த போதும், அது தொடர்பாக கணக்கீட்டு கொள்கை கூற்றின் மூலம் வெளிபடுத்தியிருக்கவில்லை. | 2022 ஆண்டில் இறுதி கணக்கு தயரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | பயன்படுத்திய கொள்கையை வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 7,201,412 ஆன தொகையை மூலதன வருமானத்திற்கு மற்றும் மூலதன செலவினத்திற்கு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் இறுதி கணக்கு தயரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய அனைத்து வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்த மற்றும் நிர்மாணிக்கப்பட்ட | | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையல்லாத 10 சொத்துக்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 20,618,256 இனை மூலதனமாக்கி இருக்கவில்லை. | | நிர்மாணிக்கப்பட்ட அனைத்து நிலையான சொத்துக்களும் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் அன்பளிப்பாக கிடைத்த 213 புத்தகங்களின் பெறுமதியை கணக்கிட்டு மூலதனமாக்கிணிருக்காததுடன், கொள்வனவு செய்த பத்தகங்களின் பெறமதி ரூபா 11,575 குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது. | | ஆண்டிற்குரிய சரியான பெறுமதியை கணக்கிட்டு மூலதனமாக்க வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்பு முதிர்ச்சியடையும் போது வருடாந்த வட்டி அந் நிலையான வைப்பிற்கு சேறாது உரிய வங்கி கணக்கிற்கு செலவாகிய போதும் அதற்குரிய வட்டி ரூபா 78,750 நிலையான வைப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் இறுதி கணக்கு தயரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | வட்டி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | ரூபா 2,400,000 ஆன நிலையான வைப்பை மற்றும் அதற்குரிய வருடாந்த வட்டியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | அனைத்து நிலையான வைப்புக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 2021 மே மற்றும் ஜுன் மாதங்களிற்குரிய குத்தகை தாமதக் கட்டணம் ரூபா 99,472 பதிவழிக்க ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் அப் பெறமதியை பதிவழித்தலை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் இறுதி கணக்கு தயரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வெண்டும். |
| (எ) | 2020 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு குழுவின் பரிந்துரை பிரகாரம் பொருட் பதிவேட்டு உருப்படிகளை பராதீனம் மற்றும் ஏலவிற்பனை செய்திருந்த போதும், அவற்றின் கிரயத்தை உரிய நடைமுறையல்லாத சொத்துக்கள் கணக்கிளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காததனால் நடைமுறையல்லாத சொத்துக்களில் பெறுமதி சரியாக இருக்கவில்லை. | | மூலதனமாக்கப்பட்டுள்ள பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய | | அட்டுறு செலவினங்களை |

| | | |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 270,651 ஆன செலவினத்திற்காக கடன்கொடுனர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | சரியாக இனங்கண்டு கணக்கிடு செய்ய வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 115(2),(3),(4) | 2011 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 50,266,187 ஆன கடன் கொடுனர் தொடர்பாக உரிய பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2011 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை காலத்தினுள் நிலவிவரும் கடன்கொடுனர் மீதி, வருமானத்திற்கு எடுக்கப்பட்டதால் கடன் கொடுனர் பதிவேட்டிலிருந்து அகற்றுவது தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் எதிரகாலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப்பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(2) | 2003 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை காலப்பகுதிற்கரியதாக பெறுமதி ரூபா 9,146,573 ஆன நாநாவித வைப்புக்கள், வேலை வைப்புக்கள், ஒப்பந்த பிணை வைப்பு மற்றும் டென்டர் பிணை வைப்பு சம்பந்தமாக தொடர்புடைய பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் வருமானத்திற்கு எடுக்க முடியுமான வைப்புக்களை கண்டறிந்து, தற்போது எடுக்க முடியுமான வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதுடன், எதிர்காலத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய வருமானத்தை வைப்பு பதிவேட்டில் வைப்பாக பேணுவதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 90,282,746 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 94,509,380 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று ரூபா 10,738,768 ஆன வீதவரி நிலுவையொன்று காணப்பட்டதுடன், அதனுள் 101 அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 422,964 ஆன மீதியொன்று மற்றும் 4978 தனியார் அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,315,804 ஆன மீதியொன்றையும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக நிலுவை வீதவரி தொடர்பாக, பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாது போனதாகவும் தற்போதைய பொருளாதாரி சிக்கல் காரணமாக நிலுவை வீதவரி அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொய்ய கடினமாகவுள்ளதாக. | நிலுவை வீதவரியை அறவிட பிரதேச சபை சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் காலரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2016 ஆண்டு முதல் 2021 ஜுன் வரை இனங்கண்டிருந்த அனுமதியற்ற 60 நிர்மாணங்களில் 10 இற்காக மாத்திரம் சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய அனுமதியற்ற நிர்மாணங்களை முறையாக்க அல்லது அகற்றுதல் தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் எதுவென கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | அனுமதியற்ற 10 நிர்மாணங்களிற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய அனுமதியற்ற நிர்மாணங்களிற்காக உடைத்தகற்றும் கட்டளை அனுப்பப்பட்டதாகவும், எஞ்சியவற்றிற்காக வழக்கு தாக்கல் செய்ய நகர அபிவிருத்தி பிரதேசமாக வர்தமானியில் பிரசுரிக்கப்படாததால் முடியாதுள்ளதாக. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நிலவுகின்ற சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |